செய்தி வெளியீடு எண்: 550 நாள்: 3.7.2010

# செய்தி வெளியீடு

## மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண நிதியுதவி தொகையை ரூ. 20,000/–லிருந்து ரூ.25,000/– ஆக உயர்த்தி வழங்கி முதலமைச்சர் கலைஞர் ஆணை

2006–2007ம் நிதியாண்டு முதல் மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண நிதியுதவி திட்டங்களில் வழங்கப்படும் நிதி உதவியை ரூ. 15,000/–லிருந்து ரூ. 20,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டது. ஏனைய திட்டங்களுடன் 2009–2010ம் ஆண்டு மாற்றுத் திறனாளியை திருமணம் புரியும் மாற்றுத்திறனாளிகளுக்கும் திருமண உதவித் தொகை வழங்கும் திட்டம் நீட்டித்து ஆணை வழங்கப்பட்டது. இவ்வாண்டு முதல் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவி வழங்கும் திட்டத்தில் ரூ. 20,000/–லிருந்து ரூ.25,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளதால் மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண நிதியுதவித் தொகையையும் ரூ.25,000/–ஆக உயர்த்தி வழங்கப்படும் என 15.5.2010 அன்று மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பாணை தொடர்ந்து மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண நிதி உதவித் தொகையை ரூ.20,000/–லிருந்து ரூ.25,000/– ஆக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இத்தொகையில் ரூ.12,500/– திருமண செலவிற்கு ரொக்கமாகவும் ரூ.12,500/– தேசிய சேமிப்பு பத்திரமாகவும் வழங்கப்படும்.

மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண நிதியுதவியைப் பொருத்தவரை தம்பதியரில் ஒருவர் மாற்றுத் திறனாளியான இருத்தல் வேண்டும். இத்திட்டத்தில் பயன்பெற வருமான உச்சவரம்பு மற்றும் கல்வித் தகுதி ஏதும் இல்லை. சட்டப்பூர்வ திருமண வயதுடையவர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டையுடன் விண்ணப்பித்தால் திருமண நிதி உதவித் தொகை வழங்கப்படும்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.